**28.01.2025**

MC.No. 06/2022 ராஜலெட்சுமி க/பெ. PW1

**குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பில்)**

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணம் முதல் திருமணம் தான். எனக்கு செப்டம்பர் மாதம் 2019 ம் ஆண்டு இராஜபாளையத்தில் திருமணம் நடைபெற்றது. அதிலிருந்து 10 நாட்கள் இராஜபாளையத்தில் எதிர்மனுதாரர்களுடன் கூட்டு குடும்பமாக தான் இருந்தோம். அங்கு எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் என்னை நல்ல முறையில் தான் வைத்திருந்தனர். எதிர்மனுதாரர் நல்ல முறையில் தான் கூட்டுகுடும்பமாக இருந்து வந்தார் என்றும், நான் தான் தனிக்குடித்தனத்திற்கு அழைத்தேன் என்றால் திருமணத்திற்கு முன்பே எதிர்மனுதாரர் பெங்களூரில் TCS நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். திருமணத்திற்கு பின் என்னையும் அழைத்து செல்வதாக தான் சொன்னார். எதிர்மனுதாரர் அவரது பெற்றோருக்கு ஒரே மகன். அவருக்கு வேறு சகோதரர், சகோதரிகள் யாரும் கிடையாது. எதிர்மனுதாரர் தான் அவரது பெற்றோரை பராமரித்து வருகிறார். பெங்களூரில் எதிர்மனுதாரருடன் தனி வீடு எடுத்து குடியிருந்து வந்தோம். அங்கு வீடு வசதி பத்தவில்லை என்றும், அறை சிறியதாக உள்ளது என்றும், வசதியாக வேற வீடு பார்க்க வேண்டும் என்றும், இல்லையென்றால் நான் தற்கொலை செய்து கொள்வேன் என எதிர்மனுதாரரை மிரட்டினேன் என்றால் சரியல்ல. எனது தாயார் சிட்டி கார்ப்பரேசனில் எழுத்தராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார்.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி

/உண்மை நகல்/ S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

நீதித்துறை நடுவர்(FAC),
இலால்குடி